# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 317/2024** | **நாள் – 19.11.2025** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ரியாஸ் அகமது | தந்தை பெயர் | திரு.ஜாபர் சாதிக் |
| ஊர் | தாராசுரம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | தனியார் துறையில் பணி | வயது | 23 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 04.07.2024 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.2 | 04.07.2024 தேதியிட்ட கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.3 | 04.07.2024 தேதியிட்ட கும்பகோணம் அன்பு தனியாா மருத்தவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.4 | 03.10.2024 தேதியிட்ட கும்பகோணம் புனித அன்னமாள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்பு சான்று அசல். |
| ம.சா.ஆ.5 | 04.07.2024 தேதியிட்ட TN 68 N 1051 என்ற பதிவெண் |

| | |
|---|---|
| | கொண்ட அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.6 | 04.03.2019 தேதியிட்ட TN 68 N 1051 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் வாகன பதிவு சான்று பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.7 | 11.01.2002 தேதியிட்ட TN 68 N 1051 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமம் பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.8 | 22.07.2024 தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கை பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.9 | எக்ஸ்ரே ரிப்போர்ட்ஸ் |
| ம.சா.ஆ.10 | மனுதாரர் தொடர் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருந்து சீட்டுகள் வரிசை – 10 |
| ம.சா.ஆ.11 | மனுதாரர் சிகிச்சை மேற்கொண்டதற்கான செலவு ரசீதுகள் வரிசை(ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |
| ம.சா.ஆ.12 | மனுதாரரின் ஓட்டுனர் உரிமம் பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.13 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல்..(நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| நீ.ம.சா.ஆ.1 | மருத்துவக்குழுமம் வழங்கிய சான்று. |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>எதிர்மனுதாரர் குறுக்குவிசாரணை</u>

விபத்து சம்பந்தமாக நான் தான் காவல் துறையில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது பெயர் என்னவென்றால் ரியாஸ் அகமது எனக்கு என்ன வயது என்றால் 23 ஆகும். விபத்து நடந்த தேதி என்னவென்றால் 04.07.2024. விபத்து நடந்த நேரம் என்ன என்றால் இரவு 12.30 மணி இருக்கும். நான் காரில் எங்கிருந்து எங்கு சென்றோம் என்றால் கும்பகோணத்தில் இருந்து சென்னை சென்றோம். காரில் எத்தனை நபர்கள்

சென்றோம் என்றால் மூன்று பேர் சென்றோம். காரை யார் ஓட்டியது என்றால் காரை நான் தான் ஓட்டினேன். நாங்கள் எங்கு இருந்து எங்கு சென்றேன் என்றால் கும்பகோணத்தில் இருந்து சென்னைக்கு சென்றோம். நான் தான் வண்டியை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். அப்போது சீட் பெல்ட் அணியவில்லை என்றால் சரியல்ல. எனது பின்புறம் யார் அமர்ந்திருந்தது என்றால் சையது அபுதாகிர் அமர்ந்திருந்தார். அரசு பேருந்து எங்கிருந்து எங்கு வந்தது என்றால் சென்னையில் இருந்து கும்பகோணம் நோக்கி வந்தது. விபத்து எங்கு நடந்தது என்றால் கும்பகோணம் நால்ரோடு ரவுண்டாணாவில் நடந்தது. 03.07.2024 அன்று TN-68-N-1051 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை அரசு பேருந்து ஓட்டுநர் மாலை 18.45 மணியளவில் சென்னையில் இருந்து புறப்பட்டு தஞ்சாவூர் நோக்கி வந்து கொண்டிருந்த பொழுது விபத்து நடந்ததாக கூறப்படும் 12.30 மணியளவில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் காரின் ஓட்டுநர் அதிவேகமாக வருவதை கண்ட அரசு பேருந்து ஓட்டுநர் வேகத்தை குறைத்தவுடன் பேருந்தின் மீது நான் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் இரவு நேரம் என்பதால் தூங்கிவிட்டதால் விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் எங்கு அனுமதிக்கப்பட்டேன் என்றால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அன்று காலையில் அன்பு மருத்துவமனையில் ஒருநாள் அனுமதிக்கப்பட்டேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்பதற்கும், எவ்வளவு வருமானம் என்பதற்கும் உரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காரின் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு வயதுகுறைவு என்பதால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் உபாதைகள்

சரியாகிவிட்டது என்றாலும் எவ்வித உபாதைகளும் எனக்கு இல்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் அரசு நிறுவனம் என்பதால் கூடுதல் இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக தவறான தகவல்களை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அரசு பேருந்து ஓட்டுநரின் மீது எவ்வித தவறும் இல்லை என்றாலும் என் மீது தான் தவறு என்றாலும் அதனால் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.11 மருத்துவ செலவு ரசீதுகளில் 6 ரசீதுகளில் மருத்துவமனை முத்திரை இல்லை என்றால் சரிதான். இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக ம.சா.ஆ.11 ஆவணத்தை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G. MANIKANDARAJA
Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.19 16:25:59 +0530

*Additional Chief Judicial Magistrate,*
Kumbakonam.